www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

## கழக மாநாடு பற்றிய அறிக்கை.

1986ம் ஆண்டு பெப்புருவரி 19ம் திகதி முதல் 24ம் திகதி வரை யாழ் கந்தரோடையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் முதலாவது மகாநாடு நடைபெற்றது. அச்சமயம் மகாநாட்டில் ஈழத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் ஆகிய அனைத்துப்பகுதிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இவ்வரலாற்றுச்சிறப்புமிக்க மகாநாட்டின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

(1). தோழர் முகுந்தன் கடைப்பிடித்துவரும் எதேச்சாதிகார, அராஜக நடவடிக்கைகளை நிராகரித்து உட்கட்சி ஜனநாயகத்தை நிலைநாட்டுவது,

(2) தோழர். முகுந்தனின் தலைமையில் கழகத்தில் நடைபெற்ற கொலைகளை விசாரணை செய்வதற்கும், அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்குமான அமைப்புக்களை ஏற்படுத்துவது,

(3) கழகத்தை சீர்குலையும் பாதைக்கு எடுத்துச்சென்ற தோழர். முகுந்தனின் மூலோபாயமற்ற அரசியல், ராணுவப்போக்குகளை கண்டிப்பதும், சரியான அரசியல், ராணுவ மூலோபாயத்தை நோக்குவதற்கான அடிப்படையை உருவாக்குவதுமாகும்.

இம்மாநாட்டின் தீர்மானங்களில் மிகவும் முக்கியமானது தோழர். முகுந்தனால் இரகசியமாக உருவாக்கப்பட்டு உட்கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட உளவுப்படையினரைப்பற்றி ஆராய்வதும், அவற்றிற்கு சரியான தீர்வு வழங்குவதுமாகும்.

மேலும் ஈழத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் ஈழத்திற்கு வெளியே இங்கு தங்கியிருந்த கழகத்தோழர்களின் மாநாடொன்றினை இங்கு நடத்துவதாகவும் முடிவு செய்யப்பட்டது.

ஈழத்தில் நடைபெற்ற இவ்மாநாடு தெரிவுசெய்ததலைமையை ஆட்சிக் குழுவுடன் ஈழத்திற்கு வெளியே இங்கு நடைபெறவிருக்கும் மாநாடு தெரிவு செய்யும் ஆட்சிக்குழு இணைந்து கழகத்திற்கான புதிய தலைமையை உருவாக்குவது என முடிவுசெய்யப்பட்டது.

இவ்வரலாற்று சிறப்பு மிக்க ஈழத்து மாநாட்டினை முறியடிக்க தோழர். முகுந்தனால் எடுக்கப்பட்ட சதி முயற்சிகள் அனைத்தையும் த.ம.வி. கழகத்தின் ஈழத்து மாநாடு முறியடித்தது. பூரண வெற்றியுடன் நடைபெற்ற ஈழத்து மாநாட்டினை மத்திய குழுவும், வெளிநாட்டுக் கிளைகளும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டமையால் தோழர். முகுந்தன் வேறுவழியின்றி ஏற்றுக்கொண்டார்.

ஈழத்து மாநாட்டின் நோக்கங்களுக்கான நடைமுறையில் செயற்பட்டு வந்த தோழர். முகுந்தன் உளவுப்படையை மீண்டும் நிலைப்படுத்தி தனது ஆதரவாளர்களைக்கொண்டு சர்வாதிகார முறையில் ஈழத்திற்கு வெளியே இங்கு நடைபெறவிருந்த மாநாட்டினை தனக்கு சாதகமாக நடாத்த முனைந்தார். இந்தமாநாடு முற்றிலும் ஜனநாயக முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த முனைந்த தற்போது இங்கிருக்கும் ஈழத்து கழக செயற்குழுவினர்களையும் பெரும்பாலான மத்திய குழுவினரையும் தனது கீழ்த்தரமான திட்டங்களுக்கு எதிராக இருப்பதால் தோழர். முகுந்தன் கொலை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

தோழர். முகுந்தன் இதற்கு முன்னர் த.ம.வி. கழக வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த சந்ததியாரை (வசந்தன்) கொலை செய்ததை அனைவரும் அறிந்ததே. இது உட்பட முப்பத்தெட்டு கொலைகளுக்கு தோழர். முகுந்தன் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிலையில் ஜூலை 19 ம் திகதியன்று நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வது தோழர். முகுந்தனின் அராஜக வாதத்திற்கு துணைபோவதாக அமையும் என்பதாலும், தமிழ் நாட்டில் வன்முறைச்சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்ப்பதற்காக நாங்கள் மாநாட்டின் ஏற்பாடுகளிலிருந்து விலகிக்கொள்வதுடன் ஜனநாயக ரீதியில் மாநாடு ஒன்றினை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மேலும் இங்கு நடைபெறும் மாநாட்டிற்கு பேராளர்களாக தெரிவுசெய்யப்பட்ட 157 பேரில் 125பேர் மாநாட்டு ஏற்பாடுகளை நிராகரித்து வெளியேறியுள்ளன தோழர். முகுந்தனுடன் எஞ்சியுள்ள 32 பேராளர்களுள் பெரும்பான்மையோர் தோழர் முகுந்தனின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்கும் உளவுப்படை உறுப்பினர்களாவர். இவர்கள் கழகத்தோழர் மத்தியிலிருந்து ஜனநாயக ரீதியில் பேராளர்களாக தெரிவுசெய்யப்படாமல் தோழர். முகுந்தனின் நேரடிச் சிபார்சின்பேரில் மாநாட்டின் பேராளர்களாக தெரிவுசெய்யப்பட்டோராவர். அத்தோடு தோழர். முகுந்தனோடு எஞ்சியுள்ள 5 மத்திய குழு உறுப்பினர்களிலொருவரும், உளவுப்பிரிவின் தலைவருமான தோழர். கந்தசாமியும் இப்பேராளர்களில் ஒருவராவர்.

த.ம.வி. கழக தலைமைச் செயற்குழுவும் கழக மத்திய குழுவின் பெரும்பான்மையாகிய யாம் பின்தள மாநாட்டினை ஜூலை இறுதிப்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் தோழர். முகுந்தன் தனது உளவுப்பிரிவின் ஆதரவுடன் போலித்தனமான மாநாடொன்றினை நடாத்தி தன்னை மீண்டும் செயலதிபராக நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஈழத்தில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே இங்கு மாநாடு ஒன்று நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி தீர்மானங்களின்படி தள செயற்குழுவின் முன்னிலையிலேயே இவ் மாநாடு நடைபெறுதல் வேண்டும். அத்தோடு இம்மாநாட்டின் பேராளர்களாக தோழர்கள் மத்தியிலிருந்து ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட தோழர்களே பங்குபற்றுதல் அவசியம். இவ்விதிகளுக்கு மாறாக நடைபெறும் எந்தவொரு மாநாடும் த.ம.வி. கழகத்தின் மாநாடாக அமைய இயலாது. இதுவே மேற்படிவிதிகளுக்கமைய தளச்செயற்குழுவும் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களாகிய 9 அங்கத்தினர்களும் சேர்ந்து கழக மாநாட்டினை நடாத்த தீர்மானித்துள்ளோம்.

இம்மாநாட்டில் கழகம் பற்றிய அனைத்து பிரச்சனைகளும் ஆராயப்பட்டு கழகம் மத்தியத்துவம் வாய்ந்த கூட்டுத்தலைமை உருவாக்கப்படும். அத்தோடு கழகத்தின் விமர்சனம், சுயவிமர்சனம் மற்றும் அரசியல் ராணுவ மூலோபாயங்கள், விஞ்ஞான பூர்வமான விவாதங்களினூடாக தீர்மானிக்கப்படும்.

அதன்

மேலும் கழகத்தின் தோழர்களாலும், அனைத்து அங்கங்களாலும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட மத்திய குழு உறுப்பினர்களாகிய தோழர்கள். முகுந்தன், கண்ணன், வாசுதேவா, கந்தசாமி, மாணிக்கம்தாசன் ஆகியோர் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களின் முடிவின்படி த.ம.வி. கழகத்திலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்படுகின்றவர்.

நடைபெறவிருக்கும் கழக மாநாட்டில் இவர்கள் சுதந்திரமான முறையில் கலந்துகொண்டு தங்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கும், விமர்சனங்களுக்கும் விளக்கமளிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் அளிக்கப்படும்.

" அனைத்து விடுதலை அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள்மற்றும் ஏனைய தொடர்புகள் அனைத்தையும் கழக மத்திய குழு ஊடாகவே ஏற்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். மத்திய குழுவுடன் மேற்கொள்ளப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் தொடர்கள் மாத்திரமே தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் பொறுப்பாகும். ஏனைய தொடர்புகள் யாவும் திரு. முகுந்தன் என்பவருடன் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பாகவே கணிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். கழகத்தின் பேரிலோ அல்லது கழகத்தின் செயலதிபர் என்ற உறவிலோ யாருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமென தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் திரு. முகுந்தனைப் பணிக்கிறது!!

கடந்த கால பணிகளை நிவர்த்திசெய்து தமிழ் பேசும்மக்களின் விடுதலையை வென்றெடுக்க இறுதிவரை பணியாற்றுவோம் என தாயகத்து மக்களுக்கு உறுதிகூறுகிறோம்.

மத்திய குழு உறுப்பினர்கள்.

-----------------

1. ஈஸ்வரன் (தள அமைப்புச் செயலாளர்)
2. ராஜன்.
3. குமரன்.
4. அசோக்.
5. சேகர்.
6. செந்தில்.
7. பாபுஜி.
8. ஆதவன்.
9. முரளி.

கழகத்தின் அனைத்துத் தொடர்புகளுக்கும்
இல. 3.4ம் குறுக்குத்தெரு,
வ.உ.சி. காலனி,
வட பழனி. சென்னை. 26.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்.

23.07.86

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்